தமிழ் நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1974 மார்ச் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

சிறுபான்மை மொழியினர்.

*331 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த சிறுபான்மை மொழியினர் அவர்தம் தாய் மொழி பயில அரசு ஏற்பாடு செய்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆங்கிலோ இந்தியர் மற்றும் தெலுங்கு, உருது, மலையாளம், கன்னடம், இந்தி, குஜராத்தி ஆகிய சிறுபான்மை மொழியினர் தொடக்கப்பள்ளி நிலையிலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையிலும், அவரவர் தாய் மொழியைக் கற்கவும், அந்தத் தாய் மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பள்ளிகளில் பிற பாடங்களைப் பயிலவும் வகை செய்யப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, no doubt the Hon. Minister for Education and other Hon. Ministers have been kind and generous towards linguistic minorities and have provided certain facilities for their education. Yet all the recommendations made by the Linguistic Minorities Commission have not yet been implemented so far. It is more than 16 years since they have made recommendations and some of the local officers for want of instructions from the Government at times become fanatical and

give lot of troubles to linguistic minorities. So, may I know whether Government will look into the matter and try to arrange for the implementation of all the safeguards for minorities in the local areas recognised by the Government at an early date.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமானால், அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆனால், சிறுபான்மை மொழியினர் தங்களுடைய மொழிகளில் பயிலுவதற்குச் சிலபல விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிமுறைகள் நிறைவேற்றப் படாமல் சிக்கல்கள் ஏற்படுமானால் அரசாங்கம் கட்டாயம் கவனிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மலையாள மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட பலரும் கன்யாகுமரி ஜில்லாவில் ஒரு சில பகுதிகளில் இருக்கின்றார்கள். நீலகிரிப் பகுதியிலும் இருக்கின்றார்கள். அவர்களுக்குத் தாய் மொழியில் கல்வி கற்கப் போதிய அவகாசம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆதலால், அதிகமான பள்ளிக்கூடங்கள் திறக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு விதிமுறை வைத்திருக்கிறோம். துவக்கப் பள்ளியைப் பொறுத்தவரையில், குறைந்தபட்சம் பத்து மாணவர்களாவது ஒரு வகுப்புக்கு இருப்பார்களானால், அந்த இடத்திலே சிறுபான்மையினர் மொழிப் பாடங்கள் வைக்கலாம். உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்த வரையில், 6 முதல் 8 வகுப்புகள் வரையில் 45 மாணவர்களாவது மூன்று வகுப்புகளிலும் சேர்த்து இருக்க வேண்டும். 9 முதல் 11 வகுப்புகள் வரையில் மூன்று வகுப்புகளிலும் சேர்த்து 45 மாணவர்களாவது இருக்க வேண்டும். அந்த அளவு எண்ணிக்கை மாணவர்கள் சிறுபான்மை மொழியில் பயில விருப்பம் தெரிவிப்பார்களானால், அவர்களுக்கு ஒரு தனி செக்ஷன் ஆரம்பிப்பதற்கு எந்தப் பள்ளியிலும் நாம் முயற்சி செய்யலாம்.

திரு. கோ. இளங்கோவன் : இந்த வசதி வாய்ப்பு உயர்நிலைப் பள்ளி அளவில் செய்யப்படுகிறதா ? கல்லூரி அளவிலும் செய்யப் படுகிறதா ?

1974 மார்ச் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி அளவிலே செய்யப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சிறுபான்மை மொழியினர் தாய் மொழி மூலம் தங்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி அளிக்க வசதி வேண்டுமென்று பள்ளிகள் ஆரம்பிக்க முன்வந்தால் அவர்களுக்கு எல்லா உதவிகளும் அளிக்கப்படுகின்றனவா ? அதனுடைய விபரம் அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற முறையில் எல்லா வசதிகளும் வாய்ப்பும் அளிக்கப்படுகின்றன.

திரு. க. நாகராஜன் : தெலுங்கு மொழி பேசும் சிறுபான்மை மொழியினர் மாநிலத்தின் வடக்குப் பகுதியிலும், சென்னை நகரத்திலும் வசிக்கின்றனர். அவர்களுக்கு இத்தகைய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல் தென் மாவட்டங்களிலும், கோவை போன்ற மாவட்டங்களிலும் தெலுங்கு மொழி பேசும் சிறுபான்மையினர் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முன்பே சுட்டிக்காட்டியபடி, துவக்கப் பள்ளிகளில் குறைந்தது பத்து மாணவர்களாவது ஒரு வகுப்புக்குக் கிடைப்பார்களானால் தெலுங்கு மொழி கற்பிக்க வகுப்புகளைத் துவக்கலாம் ; உயர்நிலைப் பள்ளிகளில் 6—8 வகுப்புகளில் மூன்று வகுப்புகளிலும் சேர்த்து 45 மாணவர்களும், 9—11 வகுப்புகளில் 45 மாணவர்களும் கிடைப்பார்களானால் இந்த வசதிகளைச் செய்து தரலாம்.

திரு. என். டென்னிஸ் : கன்யாகுமரி மாவட்டத்தில் சிறுபான்மை மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக உள்ள சில பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. அந்தக் குறையைப் போக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இல்லாத குறை இருக்குமானால் அது கவனிக்கப்படும்.

[1974 மார்ச் 9

திரு. த. சோனையா : சிறுபான்மையினராக இருக்கும் நரிக் குறவர்களுக்கு இப்பொழுது வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் கல்வி பயில வேண்டும் என்பதிலும் அரசு மிகத் தீவிரமாக முயற்சி செய்கிறது. அந்த நரிக் குறவர்கள் பேசுகிற மொழியில் அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுத் தர பள்ளிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லையானால் அவர்கள் விரும்புகிற அந்த மொழியில் கல்வி கற்றுத் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நரிக் குறவர்களுக்கு என்று மொழியே இல்லை; எழுத்தும் இல்லை; பேச்சும் இல்லை. ஆக, அதை வேறு யாரும் கற்றுக் கொடுக்க முடியாது. தமிழ் மொழியில்தான் அவர்கள் கல்வி கற்க முன்வருகிறார்கள். அதற்கு வேண்டிய வசதிகள் சில இடங்களில் செய்து தரப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். வடிவேல் : முஸ்லிம் சமுதாயம் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் உருது மொழியில் கல்வி தரும் பள்ளிகள் இருந்ததாகவும் இப்பொழுது சமீப காலத்தில் அவற்றை எடுத்து வருவதாகவும் பரவலாக ஒரு பேச்சு இருக்கிறது. அம்மாதிரி யான பள்ளிகளை மீண்டும் புதுப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த வசதி வாய்ப்புகளெல்லாம் செய்யப்படுகின்றன. சில இடங்களில் ஏற்கெனவே சமஸ்க்ருதம் எடுத்துப் படித்து வந்தவர்கள் இப்பொழுது காலத்தின் போக்கைக் கருதி தமிழைப் பயில முன்வருகிறார்கள். அதுபோன்று சிலபல இடங்களில் தமிழல்லாத பிற மொழி பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இரண்டு மூன்று மாணவர்கள் மட்டுமே சிறுபான்மை மொழியில் பயில முன்வருகிற இடத்தில் தனி வகுப்புகளை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும். பத்து மாணவர்களுக்குக் குறையாமல் முன்வந்தால் அங்கே அந்த வசதி செய்து தரப்படும்.

1974 மார்ச் 9]

திரு. ஜி. இராமசாமி : நமது அரசு சிறுபான்மையினருக்கு அவர்களுடைய தாய்மொழியில் கல்வி பயில வசதி செய்திருப்பதைப் போன்று மற்ற மாநிலங்களில் வசிக்கும் தமிழ் மொழி பேசுபவர்களுக்கும் அந்த மொழியில் கல்வி பயில வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களில்—ஆந்திர, கர்நாடக, கேரள மாநிலங்களில்—இத்தகைய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறைபாடுகள் ஏதாவது இருக்குமானால் ஸோனல் கவுன்சிலிலே அதைப் பேசி நாங்கள் தீர்த்துக் கொள்ளுகிறோம். இப்பொழுது இந்த நான்கு மாநிலங்களைப் பொறுத்தவரையில் பிரச்சினை ஏதும் ஏற்படவில்லை.

English medium schools

* 332 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state--

(a) whether there is any proposal under the consideration of the Government to render assistance for starting of English medium schools in rural areas in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே. பெரும்பாலும் நகர்ப்புறங்களில் கான்வென்ட் பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன. கிராமப் புறங்களில் இருப்பவர்கள் கூட சென்னை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் வந்து படிக்கிறார்கள். ஆகவே, அந்த வசதிகளைக் கிராமப்புற மக்களும் பெறும் வகையில் கிராமப்புறங்களிலும் இப்படிப்பட்ட பள்ளிகளைத் துவக்க யாராவது முன்வந்தால் அவற்றிற்கு அரசு மானியம் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கொள்கைப்படி, தமிழை ஆட்சிமொழியாகவும் பயிற்று மொழியாகவும் கொண்டிருக்கிறோம். தமிழைத்